**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்</u>**

**<u>முன்னிலை: திருமதி.எம். சந்தோஷம்., பி.எஸ்.சி., பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, சூலூர்</u>**

திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீ பராபவ வருடம், ஆனி மாதம் 9 ம் நாள்

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23 ம் நாள் செவ்வாய்க்கிழமை

**அசல் வழக்கு எண். 123/2024**

<u>CNR.No.TNCB17000147-2024</u>

S. கோவிந்தம்மாள், த/பெ. லேட் ஆறுமுகம், க/பெ.
சண்முகம், வயது 68, வசிப்பிடம் க.எண்.15, ஆவாரம்
பாளையம் ரோடு எண்.2, பீளமேடு, கோயம்புத்தூர்
தெற்கு தாலுக்கா, கோயம்புத்தூர் - 641 004. ... **வாதி**

//எதிர்//

1. வட்டாட்சியர், சூலூர் தாலுக்கா,
கோயம்புத்தூர் மாவட்டம்.

2. மாவட்ட ஆட்சியர், கோயம்புத்தூர் மாவட்டம்.
கோயம்புத்தூர். ... **பிரதிவாதிகள்**

07.04.2024 அன்று காலமான, காலஞ்சென்ற மாணிக்கத்தின் மனைவியான கம்சலாவின் ஒரே சட்டப்பூர்வ வாரிசு வாதிதான் என்று விளம்புகை பரிகாரம் கோரி வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கலான நாள் : 01.10.2024

வழக்கு மூலம் எழுந்த நாள் 30.05.2009, 24.01.2011, 19.10.2015, 07.06.2017,

28.06.2019, 07.04.2024, 30.05.2024 தாளக்கரை கிராமம், சூலூர் தாலுக்கா இந்நீதிமன்ற அதிகார எல்லை வரம்புக்குட்பட்டது.

நீதிமன்றக் கட்டணம் மற்றும் அதிகார வரம்பிற்காக இந்த வழக்கின் மதிப்பு ரூ. 5000/- என மதிப்பிடப்பட்டு, அதற்கு நீதிமன்றக் கட்டணம் ரூ.150/- தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் மற்றும் வழக்கு மதிப்பீட்டுச் சட்டம் 14/2017 திருத்தப்பட்டது பிரிவு 25(d)ன் கீழ் செலுத்தப்பட்டுள்ளது.

**<u>மதிப்பீட்டு விவரம்</u>**

| | |
|---|---|
| விளம்புகை பரிகாரத்தின் மதிப்பு | ரூ. 5 ,000/- |
| பிரிவு 25(d)ன் கீழ் செலுத்தப்பட்டுள்ள நீதிமன்றக் கட்டணம் | ரூ.150/- |

இந்த வழக்கானது இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.M.ஹரினி, அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் அரசு வழக்கறிஞர் திரு.S.மகேந்திரன், அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய கண்காணிப்பில் இருந்து வந்து சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலிக்கப்பட்டு இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்பாணை</u>**

1). 07.04.2024 அன்று காலமான, காலஞ்சென்ற மாணிக்கத்தின் மனைவியான கம்சலாவின் ஒரே சட்டப்பூர்வ வாரிசு வாதிதான் என்று விளம்புகை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

2). செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என தீர்ப்பளிக்கப்படுகிறது.

**<u>செலவு தொகை பட்டியல்</u>**

//இல்லை//

(செலவு தொகைப் பட்டியல் இருதரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை)

**<u>சொத்து விபரம்</u>**

//இல்லை//

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23-ம் நாளாகிய இன்று என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

Sd/M.Santhosham

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சூலூர்.**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

சூலூர், அசல் வழக்கு எண். 123/2024

தீர்ப்பாணை, நாள்: 23.06.2026